### மலேசிய வருகை ஆண்டு

# உலக சுற்றுப்பயணிகளை வரவேற்க தயாராக இருப்பீர்:

## மலேசியர்களுக்கு சபாரூடின் அறைகூவல்

[பி.ஆர்.ராஜன்]

கோலாலம்பூர், டிச.12
1990 ஆம் ஆண்டில் உலகம் முழுவதிலும் இருந்து மலேசியாவுக்கு வருகைப்புரிய இருக்கும் சுற்றுப்பயணிகளை வரவேற்பதற்கு தயாராக இருக்கும்படி கலாசார மற்றும் சுற்றுப்பயணத் துறை அமைச்சர் டத்தோ சபாரூடின் சிக் இன்று வாழ்க்கையில் எல்லா நிலைகளையும் சேர்ந்த மலேசியமக்களை கேட்டுக் கொண்டார்.

உலகத்திற்கு மலேசியாவை அறிமுகப்படுத்துவதற்கு அரசாங்கப் 1990 ஆம் ஆண்டை மலேசிய வருகை ஆண்டாக பிரகடனம் செய்துள்ளது. அதற்கு இன்னும் சில தினங்களே எஞ்சியுள்ளன. இந்நிலையில் அரசாங்கத்தின் இந்நோக்கம் முழுமையான வெற்றியை பெற்றிடுவதற்கு மலேசிய மக்களின் நேரடியான அல்லது மறைமுகமான பங்கும் மிகவும் அத்தியாவசியமானது ஆகும் என்று அவர் சொன்னார்.



ஓவியர் சையது தாஜுடின்

இங்குள்ள பிரபல ஹோட்டல் ஒன்றில் 1990 ஆம் ஆண்டுக்கான ஷெல் மலேசியா நிறுவன காலண்டர்களை பெற்றுக் கொள்ளும் நிகழ்ச்சியில் அவர் பேசினார்.

மலேசிய வருகை ஆண்டை முன்னிட்டு ஷெல் மலேசியா பிரத்தியேகமான முறையில் இக்காலண்டரை தயாரித்துள்ளது.

சுற்றுலாத் துறை வழி மலேசியாவை உலக வரை படத்தில் ஒரு முக்கிய நாடாக அடையாளம் காட்டிடுவதற்கு அரசாங்கம் மலேசிய வருகை ஆண்டை திட்டமிட்டிருக்கிறது. இத்திட்டம் அதன் முழுமையான நோக்கத்தை அடைந்திடுவதற்கு ஒவ்வொரு மலேசியரும் தங்களது பங்கினை ஆற்றிட வேண்டும் என்று டத்தோ சபாரூடின் அறைகூவல் விடுத்தார்.

நாட்டின் பொருளாதாரத்துறை மேம்பாட்டில் மற்ற துறைகளோடு ஒப்பிடுகையில் ஆக்கப்பூர்வமான வருமானத்தை- தரக்கூடிய ஒரு துறையாக சுற்றுலாத் துறை விளங்குகிறது. இந்நிலையில் அதன் வளர்ச்சிக்கு தனியார் துறை ஆற்றிவரும் பங்கும் மிக முக்கியமானதாக அரசாங்கம் கருதுகிறது என்று அவர் சொன்னார்.

ஷெல் மலேசியா நிறுவனம் சரியான நேரத்தில் இக்காலண்டரை அறிமுகம் செய்திருப்பதை அவர் வெகுவாகப் பாராட்டினார்.

நாட்டின் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கு மற்ற தனியார் துறைகளும் முன்வரும் என்று டத்தோ சபாரூடின் நம்பிக்கைத் தெரிவித்தார்.

'மலேசிய வருகை ஆண்டு' திட்டம் மாபெரும் வெற்றியை பதிவு செய்திடுவதற்கு ஒவ்வொரு மலேசியரும் தனியார் நிறுவனங்களும் தங்களது பங்காக தங்களது முயற்சிகளை இரட்டிப்பாக்க வேண்டும் என்று அவர் அறைகூவல் விடுத்தார்.

### முஹம்மது நிஸார்

முன்னதாகப் பேசிய மலேசியாவில் உள்ள ஷெல் நிறுவனங்களின் கார்ப்பரேட் விவகாரங்கள் நிர்வாக இயக்குநர் இஞ்சே முஹம்மது நிஸார் இட்ரிஸ், 1990 ஆம் ஆண்டு மலேசிய வருகை ஆண்டாக பிரகடனப்படுத்தப் பட்டிருப்பதையொட்டி மலேசிய கலாசாரத்தின் தனிப் பெருமை கூறுகளை விவரிக்கும் வண்ணம் 'மலேசிய இதிகாசங்கள்' என்ற கருப்பொருளில் இக்காலண்டர் அமைந்துள்ளது என்றார்.

இந்நிகழ்ச்சியில் 750 காலண்டர்களை அவர் டத்தோ சபாரூடின் சிக்கிடம் வழங்கினார்.

உலகம் முழுமையிலும் உள்ள மலேசிய சுற்றுப் பயண மேம்பாட்டு கழகங்களுக்கு இக்காலண்டர்கள் அனுப்பிவைக்கப்படும்.

யுனைடெட் ஆசியன் வங்கியின் ஓவியர் சையது தாஜுடின் சுமார் ஏழு மாத காலத்தில் இந்த இதிகாசங்களை விவரிக்கும் ஓவியங்களை வரைந்து சாதனைப் படைத்துள்ளார்.